பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 25 (8—2—68) வியாழன் ★ வெளியூர்: தை 26 (9—2—68) வெள்ளி [இதழ்: 197

பள்ளிகள் கட்டுவதற்கு ரூ. 30-இலட்சம்

மாநில அரசு வழங்குகிறது

சென்னை, பிப். 8—

தமிழகத்தில் பள்ளிகள் கட்டுவதற்காக நடப்பு ஆண்டில் ரூ. 30-இலட்சம் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தரப்படும்; இதில் சென்னை மாநகராட்சிக்கு ரூ. 5-இலட்சம் கிடைக்கும்.

தமிழகத்தைப் பற்றி டில்லியின் தவறான கணக்கு!

வளங்காணும் முயற்சிக்குத் துணை நிற்க மறுக்கிறது

'வரி வருவாயைப் பெருக்கத் துணிந்தும் இணை மானியம் அளிக்க முன்வரவில்லை'--சென்னைக் கருத்தரங்கில் அண்ணா குற்றச்சாட்டு

சென்னை, பிப். 8—

"தி.மு.க. ஆட்சி பதவியேற்ற முதல் ஆண்டிலேயே வரி விதிப்பு மூலம் ரூ. 6 கோடி வருவாயைப் பெருக்கத் துணிந்தது; ஆனால் இதனைப் பாராட்டவோ, அந்த அளவுக்கு 'இணை மானியம்' எதுவும் வழங்கவோ மத்திய அரசு முன்வரவில்லை!

"தமிழகம் மிகவும் முன்னேறியிருப்பதாக மத்திய அரசு தவறாகக் கருதிக்கொண்டிருக்கிறது! நாம் முன்னேற்றப் பாதையில்தான் இருக்கிறோமே தவிர, இன்னும் முன்னேறிவிடவில்லை!

"இங்கே நாம் புரிந்துவரும் வேளாண்மைப் புரட்சிக்கு மத்திய அரசு துணையாக இருக்கவேண்டும். உண்மையிலேயே, தமிழ்நாடு வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலுமான எல்லா வகைப் பரிசோதனைக்கும் உரிய இடமாக இருந்துவருகிறது. மற்ற மாநிலங்களில் ரூ. 100 கோடி செலவில் ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டால் அதே திட்டத்துக்கு இங்கே ரூ. 80 கோடிதான் செலவிடப்படுகிறது; இது, இந்த மாநிலத்தின் அமைச்சர்களும், அதிகாரிகளும் ஏற்படுத்தியிருக்கின்ற வெற்றிகரமான மரபாக இருந்துவந்திருக்கிறது.

"தமிழக வேளாண்மைத் திட்டங்களுக்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு அளித்திடுமானால், இன்னும் ஈராண்டுகளில், நெல் விளைச்சலில் 'உபரி' நிலை ஏற்படுவதுடன், நேர்த்தியான சில ரக அரிசியை அயல்நாடுகளுக்கும் நம்மால் ஏற்றுமதி செய்ய முடியும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற மாவட்டத் தீவிரச் சாகுபடித் திட்டம் பற்றிய கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தென் மாநில முதலமைச்சர்களுடன் மொரார்ஜி சந்திப்பு

கைத்தறிப் பிரச்சினைகள் பற்றி விவாதிப்பாராம்

புதுடில்லி, பிப். 7—

கைத்தறித் தொழில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள்குறித்து விவாதிப்பதற்காகத் தென்னக மாநிலங்களின் முதலமைச்சர்களைப் பெங்களூரில், துணைத்தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

"மத்திய அரசும்—மாநில அரசும் விதிக்கும் வரிகள் தாங்கக் கூடியனவாக இல்லை" என்று கைத்தறித் தொழில் துறையினர் செய்துள்ள முறையீட்டையொட்டியே மொரார்ஜி தேசாய், இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறாராம்.

நான்கு தென்னக முதலமைச்சர்களையும் சந்தித்து, 1968-69-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் உருவாக்கப்படுவதற்குமுன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள அவர் விரும்புகிறாராம்.

இந்தச் சந்திப்பின்போது, கைத்தறித் தொழில் தொடர்பான பிரதிநிதிகளும் கலந்துகொண்டு கருத்துரை வழங்க ஏற்பாடு செய்யப்படுமாம்.

பாதியில் வந்த பதவி பாதியிலேயே போய்விடும்

கோஷ் அமைச்சரவையை கவிழ்க்கக் காங்கிரசு சதி

கல்கத்தா, பிப். 8—

மேற்கு வங்கத்தில் அமைந்துள்ள பி. சி. கோஷ் அமைச்சரவைக்கு இதுகாறும் ஆதரவு காட்டிவந்த காங்கிரசு மற்றும் கூட்டணி எம்.எல்.ஏ.-க்களில் 15 பேர், அசுதோஷ் கோஷின் ஆதரவாளர்களாக மாறிவிட்டனர். காங்கிரசு எம்.எல்.சி.-யான அசுதோஷ் கோஷ், பி. சி. கோஷின் அமைச்சரவைக்கு எதிராகச் செயல்பட்டுவந்தவராவார்.

அசுதோஷ் கோஷை ஆதரிப்பவர்களில், இரண்டு பேர் முன்னாள் காங்கிரசு அமைச்சர்களும், இப்போதைய கூட்டணி அமைச்சர்கள் மூவரும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

(1-ம் பத்தி தொடர்ச்சி)

கிரசுக்காரர்தான்; அவரும் கடந்த அக்டோபர் 2-ந் தேதியன்று மற்ற அமைச்சர்களிடையே பேசுகையில், கண்ணீர் விட்டு அழுதாராம்! தமது பதவியை இராஜினாமா செய்ய முன்வந்ததற்கான காரணங்களை விளக்குகையில், அவருக்கும் அழுகை வந்துவிட்டதாம்!

இங்கு மேற்கு வங்க முதலமைச்சராக இருக்கும் பி. சி. கோஷும் முன்பு காங்கிரசில் இருந்தவர்தான்; முதலமைச்சராகத் தாம் பதவியேற்றது குறித்து நிருபர்களிடையே அவர் பேசுகையில், அவர்கண்களும் கலங்கியிருந்தன!

பரிதாபத்துக்குரிய காங்கிரசுத் தலைவர்கள்

நடந்ததை நினைத்துக் கண்ணீர் சிந்திய காட்சி!

கல்கத்தா, பிப். 8—

காங்கிரசுப் பெருந் தலைவர்களில் ஒருவரும் மேற்கு வங்கக் காங்கிரசுக் கட்சியின் 'சர்வாதிகாரி' என்று கருதப்பட்டுவருபவருமான அதுல்ய கோஷ், அண்மையில், பலர் முன்னிலையில் கண்ணீர்விட்டு அழுதாராம்!

பல காங்கிரசு எம்.எல்.ஏ.-க்கள் அவரது நடவடிக்கைகளைக் கடுமையாகத் தாக்கிப் பேசியபோது அவர் கண்கலங்கினாராம்; 'நான் செய்ததெல்லாம், கட்சியின் நன்மை கருதியே அன்றி, எனது சொந்த நன்மைகளுக்காக அல்ல' என்று அதுல்ய கோஷ் கண்ணீர் சொரிந்தவாறே அவர்களுக்குப் பதில் கூறினாராம்.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் பி. சி. சென், தேர்தலில் தாம் தோல்வியடைந்துவிட்டதாகக் கேள்வியுற்றபோது, கண்ணீர்விட்டு அழுததாகக் கூறப்படுகிறது!

ஐக்கிய முன்னணி அமைச்சரவையில், முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அஜாய் முகர்ஜியும், ஒரு முன்னாள் காங்

(5-ம் பத்தி பார்க்க)

எதெதற்கோ பயன்படுகிற 'தேசீய'ம் இதற்கு இல்லையா?

ஆற்று நீரை ஒன்றுபடுத்தத் திட்டம் எங்கே?

ஒருமைப்பாடு பேசும் டில்லிக்கு அறிஞர் அண்ணா இடித்துரை

சென்னை, பிப். 8—

"நாட்டின் ஒருமைப்பாடு குறித்துப் பேசும் மத்திய அரசு, நமது நீர் வளங்களை ஒன்றுபடுத்துவது பற்றிப் பேச முன்வரவில்லை!

"பல்வேறு துறைகளிலும் 'தேசியம்' என்ற சொல் புகுத்தப்பட்டு வருகிறது; ஆனால், இதில் ஒரு 'தேசிய'க் கொள்கை இல்லை"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற மாவட்டத் தீவிரச் சாகுபடித் திட்டம் பற்றிய மாநிலக் கருத்தரங்கில் பேசுகையில் வருத்தத்துடன் கூறினார்கள். இதுபற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கங்கையும் பிரம்மபுத்திராவும் பாயும் பகுதிகளில் தண்ணீர் அளவுக்கு மிஞ்சிக் கிடைக்கும் அதேநேரத்தில், பீகாரும் இராயலசீமாவும், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளும் தண்ணீர்த் தட்டுப்பாட்டால் ஏங்குகின்றன.

"ஆந்திரத்தில் உள்ள கோதாவரியும் கிருஷ்ணா ஆறும் பெண்ணாற்றுடன் இணைக்கப்பட்டு அந்த நீர் தமிழ்நாட்டுக்குப்பயன்பட்டால் நமது வறண்ட பகுதிகளை வளம் கொழிக்கச் செய்ய முடியும்!

"கேரளத்தில் வீணே கடலில் கலக்கும் ஆற்று நீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிட்டால் இங்கே பண்ணை விளைச்சலைப் பெருக்க முடியும்!



"நாம் மாநாடுகளையும், வட்டாரக் குழுக் கூட்டங்களையும் கூட்டுகிறோம்; அவற்றிலே நடக்கும் விவாதங்கள் புதிய பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன; அந்தப் பிரச்சினைகளை விவாதிப்பதற்கான நாட்களைக் குறிப்பிட்டுவிட்டுக் கலைந்துவிடுகிறோம்.

"எனவே, நமக்கு ஒரு தேசியத் தண்ணீர்த் திட்டம் தேவை."

'ஐயப்பாடுகளை அகற்றினாலன்றி இந்தி ஏற்கப்படமாட்டாது'

நிஜலிங்கப்பா கருத்து

புதுடில்லி, பிப். 8—

"தென்னாட்டவர்கள் இந்தியை ஏற்கவேண்டுமானால் ஆட்சி மொழி விவகாரம் குறித்து அவர்கள் மனத்தில் இன்னும் இருந்து வருகின்ற சில ஐயப்பாடுகளை அறவே அகற்றியாக வேண்டும்"

என்று காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா, பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தனவும், எந்த அரசியல் கட்சியையும் சேராதனவுமான பல மாணவர்கள் மற்றும் இளைஞர் கழகங்கள் ஒன்றுகூடி நடத்திய கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

நம்நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 தை 25 (8-2-68) வியாழன்

முரண்பாடுமல்ல -- முறையற்றதுமல்ல!

காங்கிரசு ஆட்சிக்காலத்தில் புகுத்தப்பட்ட இந்தி மொழியை, இன்றையக் கழக ஆட்சி, பள்ளிகளிலிருந்து விரட்டிவிட்டது. இன்று, தமிழகப் பள்ளிகளில் இந்தி மொழி கற்பிக்கப்படுவதில்லை.

இதுவரையில், இந்தி மொழியை மாணவர்கள் கற்பதற்குக் காங்கிரசு ஆட்சியினர் செய்திருந்த ஏற்பாடு என்ன? 'விருப்பமுள்ள மாணவர்கள் இந்தியைப் படிக்கலாம்' என ஏற்பாடு இருந்திட்டாலும், மூன்றுவது மொழியாக வேறு மொழியை மாணவர்கள் படித்துக்கொள்ள, காங்கிரசு ஆட்சி அதற்குரிய ஏற்பாட்டினைச் செய்திருக்கவில்லை.

மூன்றுவது மொழியாக மாணவர்கள் கற்றுக்கொள்ள வேறு மொழி ஏற்பாடு இல்லாத காரணத்தால், இந்தி மொழியை மட்டுந்தான் கற்றுக்கொள்ள மாணவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு வந்தனர். இந்த முறையில், இந்தி மொழி, பள்ளிகளில் கட்டாயப் படுத்தப்பட்டு வந்தது.

இந்த மறைமுகக் கட்டாயம் ஒருபக்கம் இருக்க, இந்தி மொழியைப் படிக்கின்ற மாணவர்கள் அம்மொழியில் தேர்வு எண் பெற வேண்டியதில்லை; ஏதோ இந்தி மொழியை மாணவர்கள் விருப்பப் பாடமாகப் படித்துவருகின்றனர்; அம்மொழியில் பரீட்சையும் எழுதுகின்றனர்; இந்திப் படிக்கின்றவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு தமிழகத்தில் பெருகிக்கொண்டேபோகிறது—என்ற கணக்கை இந்தி வெறியர்களுக்குக் காட்டவும், 'தமிழகத்தில் இந்தி மொழிக்கு எதிர்ப்பு கிடையவே கிடையாது' என இந்தி வெறியர்களை நம்பச் செய்யவுமே காங்கிரசு ஆட்சியினர், இதுவரையில், இந்தி மொழி கற்கின்ற ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

காங்கிரசு ஆட்சியினர் கையாண்டுவந்த இந்த விசித்திரமான இந்தி கற்பிக்கும் ஏற்பாட்டினுல், 'இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டிருக்கின்ற ஏற்பாட்டினைத் தமிழக மக்கள் முழுமூச்சாக எதிர்த்துவருகின்றனர்' என்ற உண்மை நிலையை, இந்தி வெறியர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை; 'ஆட்சி மொழியாக இந்தி திணிக்கப்படுவதைத் தமிழக மக்கள் ஆதரிக்கின்றனர்' என்ற தவறுன எண்ணத்துக்கும் இந்தி வெறியர்கள் வந்துவிட்டனர்.

'பள்ளிகளில் இந்தி மொழியைக் கற்பிப்பது' என்பதன் பெயரால் தமிழகக் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் செய்த ஏற்பாடு, தமிழக மக்களுக்குத் திட்டமிட்டுச் செய்த துரோகமாகும்.

இந்தத் துரோகத்தை, இன்றையக் கழக ஆட்சி, பள்ளிகளில் இந்தி மொழி பெயரளவுக்குக் கற்பிக்கப்பட்டுவந்தமைக்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பதன் மூலம் துடைத்திருக்கிறது. தமிழக மக்களுக்குக் காங்கிரசுக்கட்சியினர் இழைத்துவந்த தீங்கை, கழக ஆட்சி ஒழித்துக்கட்டிவிட்டது.

'இந்தி மொழி மட்டுமே ஆட்சி மொழி' என்ற ஏற்பாட்டிற்குத் தமிழகத்தில் எத்தகைய எதிர்ப்பு இருக்கிறது என்ற உண்மையை, கழக ஆட்சி செய்திருக்கின்ற முடிவினுல் இந்தி வெறியர்கள் உணர்ந்துகொண்டுவிட்டனர். இதுவுமன்றி, நேற்றுவரையில், 'இந்தி மொழியைத் தமிழக மக்கள் ஆதரிக்கின்றனர்' எனத் தங்களை நம்பவைத்துக்கொண்டிருந்த தமிழகக் காங்கிரசுத் தலைவர்களின் அரசியல் புரட்டையும், உணர்ந்துகொள்ள வேண்டியவர்கள் ஐயத்திற்கிடமின்றி உணர்ந்துகொண்டுவிட்டனர்.

கழக ஆட்சியில், 'பள்ளிகளிலிருந்து இந்தி மொழி ஒழிக்கப்படும்' என்ற கருத்தைத் தீர்மானமாகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டபொழுது, முக்கிய எதிர்க் கட்சியாக இருந்த காங்கிரசுக் கட்சி, அத்தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருக்க வேண்டியதுதான் முறை; ஆனுல், எதிர்க் கட்சியான காங்கிரசுக் கட்சியோ, தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்கவில்லை; அதற்கு மாருக, நடுநிலைமையாக இருந்துவிட்டிருக்கிறது!

இன்றைய அரசின் இந்தி ஒழிப்பு முடிவுக்கு, சட்டப் பேரவையில் வாய்மூடிக் கொண்டிருந்தது காங்கிரசுக் கட்சி; ஆனுல், அக்கட்சியின் தலைவராக இடம் பெற்றிருக்கின்ற சுப்பிரமணியமோ, 'இந்தி ஒழிப்பு முடிவு தவருனது; பொதுமக்களை ஏமாற்றும் வேலை' என்றெல்லாம் ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்கின்ருர்.

இந்தி ஒழிப்புத் தீர்மானம் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டபொழுது, அதை எதிர்த்து வாக்களிக்கும்படி தமது சட்டசபைப் பிரிவுக்கு ஆணை பிறப்பிக்க விரும்பாத தமிழகக் காங்கிரசுக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம், வெளியில் ஏன் தீர்மானத்துக்கு எதிராக ஒப்பாரி வைக்கவேண்டும்? காங்கிரசுக் கட்சியின் இரண்டு பிரிவுகளுக்குள் இந்த முரண்பாடு ஏன்? இதற்கான விளக்கத்தை சுப்பிரமணியம்தான் கூறவேண்டும்.

அரசியல் சட்டத்தில் இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதாம்; எனவே, தமிழகச் சட்டப் பேரவை இந்தி ஒழிப்புத் தீர்மானம் போட்டிருப்பது, 'ஏமாற்று வேலை' என்கிருர் சுப்பிரமணியம்!

அரசியல் சட்டத்தில் இந்தி எப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது—இந்தியை ஏற்றுக்கொள்ள எத்தகைய ஆதரவு இருந்தது என்பதெல்லாம் பழங்கதை!

அரசியல் சட்டத்தில் இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற ஒரு காரணத்திற்காகவே, 'அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் அல்லது இந்தியை அதிலிருந்து அகற்றவேண்டும் எனக் கோரக்கூடாது' என்பதில்லை. இப்படிக் கோருவது, அரசியல் சட்டத்துக்கு விரோதமான செயலுமல்ல—மதிக்காத போக்குமல்ல!

'இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்றவரையில், ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருந்துவரவேண்டும்' என்ற கருத்து நியாயமானது—தேவையானது என ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்குப் பிறகு, 'இந்தி படிப்பது தேவையற்றது' என்ற முடிவுக்கு இன்றையத் தமிழக அரசு வந்திருப்பதும், அம்முடிவுக்கு ஏற்ப இந்தி போதனைக்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பதும், தவருனது அல்ல—அரசியல் சட்டத்துக்கு முரணுனதும் அல்ல!

—கா. க.

காமராசர் கருத்தை மதித்து ஏற்கவில்லை

காங்கிரசுச் செயற்குழுவில் முன்னுள் தலைவருக்கு ஏற்பட்ட கதி!

மொரார்ஜி தேசாயுடன் மோதித் தோற்ருர்!

பம்பாயிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழான 'பிரீ பிரஸ் ஜர்னல்' ஏட்டில்—'டெல்லி டைரி' என்ற தலைப்பின்கீழ், காங்கிரசுச் செயற்குழுவில் காமராசருக்கும்—மொரார்ஜி தேசாய்க்கும் ஏற்பட்ட மோதல் பற்றியும், கழக ஆட்சியைக் கவிழ்க்க மொரார்ஜி தேசாய் காட்டும் தீவிரம் பற்றியும், காங்கிரசில் காமராசருக்கு ,என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதும் விளக்கப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

"நடைபெற்ற காங்கிரசுச் செயற்குழுக் கூட்டத்தில், 'இனிமேல் மும்மொழித் திட்டத்தை வைத்துக்கொண்டிருப்பதில் பயனில்லை' என்று காமராசர் எடுத்துக்கூறினுர்; 'தமிழ்நாடு சட்டமன்றம் மும்மொழித் திட்டத்தை நிராகரித்து விட்டது; தமிழ் ஆங்கிலம் என்கிற இரு மொழிகளே போதும்' என்று தீர்மானம் போட்டிருக்கிறது; இதற்குப் பிறகும் மும்மொழித் திட்டத்தை வலியுறுத்தி காங்கிரசுக் காரியக் கமிட்டி தீர்மானம் போடுவதில் பலன் என்ன?' என்று காமராசர் கேட்டார்.

செயற்குழுக் கூட்டத்துக்குள்ளேயே திரு. காமராசரும்—திரு. மொரார்ஜி தேசாயும் கடுமையாக மோதிக்கொண்டனர்.

"தமிழகத்தில் உள்ள தி.மு.க. அரசு மொழிப் பிரச்சினையை வைத்துப் பதவியை இராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறது; அந்தச் சாத்தியத்தையும் ஆராய வேண்டும்; அப்படித் தி.மு.க. அரசு பதவி விலகித் தமிழ்நாட்டில் மறு தேர்தல் வருமானுல் காங்கிரசு அடியோடு ஒழிக்கப்பட்டுவிடும்" என்கிற அச்சத்தையும் காமராசர் எடுத்துக் கூறினுர்.

'அப்படியானுல் அடுத்த இரு ஆண்டுகளுக்குத் தேர்தல் நடத்தாமல் விட்டுவிடுவோம்' என்று அதற்கு மொரார்ஜி தேசாய் பதில் கூறியதாகத் தெரிகிறது.

அமைச்சர்களை உருவாக்கிவந்த முன்னுள் காங்கிரசுத் தலைவரின் 'தலைவிதி' இப்படியாகிவிட்டது."

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"தமிழ்நாட்டைத் தவிர மற்றெல்லாத் தென் மாநிலங்களும் தமது அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை ஆதரிப்பதாகத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூறுகிருர்; இதைவிட உண்மைக்கு மாருன வேறென்றைக் காண முடியாது.

"மைசூரிலும் ஆந்திரத்திலும் மக்கள் இந்தியை எதிர்த்து வன்மையாகப் போராடத் துவங்கிவிட்டனர். அம்மாநிலங்களில் உள்ள காங்கிரசு அரசுகளால் மக்களை அமைதிப்படுத்தவோ அவர்கட்கு ஆறுதல் கூறிடவோ இயலவில்லை. மறுபுறம் தமிழ்நாட்டைப் பார்த்தால், அங்கு மக்களும்—ஆட்சியினரும் ஒரு மனதானவர்களாக இருக்கிருர்கள்!

"மக்களும், தங்கள் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் வன்முறையற்றவகையில் வெளிப்படுத்துகிருர்கள்!"

திட்ட குழுவுடன் மொரார்ஜிதேசாய் மோதல்!

நிதி ஒதுக்குவதில் பெரும் பிணக்கு!

புதுடில்லி, பிப். 7—

அடுத்த ஆண்டுக்கான திட்டங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்பது குறித்து, மத்திய நிதித்துறைக்கும் திட்டக் குழுவுக்குமிடையே பெருமளவுக் கருத்து வேறுபாடு இருந்துவருகிறது.

அண்மையில் தலைநகரில் திட்டக் குழு கூடியபோது, இந்த வேற்றுமைகளை அகற்ற எவ்வளவோ முயன்றபோதிலும் அந்த முயற்சியில் வெற்றி கிட்டவில்லை!

திட்டங்கள் பயனுள்ள வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டுமானுல், இந்த ஆண்டுக்கான திட்டங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதோ — அதைக் காட்டிலும் அதிகமாக இல்லாவிட்டாலும்—அதே அளவுத் தொகையைவாவது அடுத்த ஆண்டுக்கான திட்டங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று திட்டக் குழு கருதுகிறது; மாநில முதலமைச்சர்களும் இதே கருத்தைத்தான் வலியுறுத்திவருகின்றனர்; ஆனுல், 'தற்போது கிடைக்கக்கூடிய நிதி வசதிகளுக்கேற்பத் திட்டங்களை மிகவும் குறைந்த அளவிலேயே மேற்கொள்ள வேண்டும்' என்று மத்திய நிதியமைச்சகம் வற்புறுத்துகின்றது.

அண்மைக் காலமாக நாட்டின் வரவு - செலவு நிலைமை சீர்திருந்துவதற்குப் பதிலாக மோசமடைந்து வருகிறது என்பதை நிதியமைச்சகத் துறை அதிகாரிகள் திட்டக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். அடுத்த ஆண்டுக்கான வெளிநாட்டு உதவியும் இன்னும் நிச்சயமாகவில்லை என்பதையும் அவர்கள் எடுத்துக்கூறினர்.

திட்டக் குழுவுக்கும்—நிதியமைச்சகத்திற்கும் இடையே இருந்து வரும் இந்தப் பலத்த கருத்து வேற்றுமைகளை நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் 'சரிக்கட்டி' விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது; மொரார்ஜியின் போக்குக்குத் தலைமையமைச்சரும் எதிர்ப்புக் காட்டமாட்டார் என்று நம்பப்படுகிறது.

அடுத்த ஆண்டுக்கான திட்டம் ரூ. 100 கோடிக்கு மேற்படாமல் இருக்கவேண்டும் என்று மொரார்ஜி தேசாய் கருதுகிருர்.

நாடாளுமன்ற மேலவையில் காங்கிரசு பலம் குறைந்துவிடும்

மூன்றில் ஒரு பகுதி இடத்துக்கு புதிய தேர்தல்

தமிழ் நாட்டிலிருந்து 6-பேர் தேர்ந்தெடுக்கப்படுவர்

புதுடில்லி, பிப். 8—

நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரண்டாண்டுக்கு ஒருமுறை பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

1868 ஏப்ரல் 2-ம் நாள் 80 உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிகிறது; இவர்களில் 76 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; நால்வர் நியமன உறுப்பினர்கள்.

மார்ச் மாத முடிவுக்குள் காலியாகும் இடங்களுக்கு 76 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இத்தேர்தலில் மேலவையில் காங்கிரசுக் கட்சியின் பலம் குறைந்துவிடக்கூடும்; 20 உறுப்பினர்கள் குறைந்துவிடுவார்கள்.

அந்த அவையில் மொத்தம் 240 உறுப்பினர்கள் உள்ளனர்; அவர்களில் 228 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள்; 12 பேர் நியமிக்கப்பட்டவர்கள்; காங்கிரசுக் கட்சியில் 165 பேர் உள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 57 காங்கிரசு உறுப்பினர்கள் பதவி இழக்கிருர்கள்.

பொதுத் தேர்தல்களில் மாநிலங்களில் கட்சிகளின் பலம் மாறிவிட்டதால், மார்ச் மாதத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு 40 இடங்களே கிடைக்கக் கூடும் என்று தோன்றுகிறது.

19 பேர்—மற்ற கட்சிகளைச் சார்ந்தவர்கள் வருவார்கள்.

நாடாளுமன்ற மேலவையில் அரசுக் கட்சித் தலைவராக உள்ள

(3-ம் பக்கம் பார்க்க)

'மிளகாய்க் கொள்முதலில் அரசு அக்கறை காட்ட வேண்டும்'

'இல்லையேல் இடைத்தரகர்கள் நுழைந்து விலையேற வழி செய்வர்'

டில்லி அமைச்சரிடம் குண்டூர் மிளகாய் உற்பத்தியாளர்களின் தலைவர் முறையீடு

புதுடில்லி, பிப். 8—

மிளகாய் வணிகத்தில் ஈடுபட உணவுக் கார்ப்பரேஷன் கொள்கையளவில் முடிவு செய்துள்ளது.

மத்திய உணவு-வேளாண்மைத் துணையமைச்சர் ஏ. பி. ஷிண்டேயைச் சந்தித்தபின், குண்டூர் மிளகாய் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் தருவரி வீரய்யா இத்தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

உணவுக் கார்ப்பரேஷனின் முடிவை வரவேற்ற வீரய்யா, 'உணவுக் கார்ப்பரேஷன் உடனடியாக மிளகாய் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொள்முதல் செய்யாவிட்டால் சிறு உற்பத்தியாளர்களிடமிருந்து மிளகாய் இடைப்பட்ட மனிதர்களிடம் போய்விடக்கூடும்' என்று அமைச்சரிடம் கூறினுர்; 'மிளகாய்க்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசு நிர்ணயிக்க வேண்டும்' என்றும் கூறினுர்.

தேர்தல் ஒழுங்காக நடைபெறப் புதிய யோசனைகள்

முன்னாள் தேர்தல் ஆணையாளரின் அறிக்கை

தமிழக அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டுக்குப் பாராட்டு

புதுடில்லி, பிப். 8—

“பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், தமது தேர்தல் செலவுக்குக் கணக்குக் காட்டுவது தொடர்பான சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும்; ஏராளமான வேட்பாளர்கள் போட்டியிடாமல் இருப்பதற்குப் பொறுப்புத் தொகையை அதிகப்படுத்த வேண்டும்; தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் ஓர் ஒழுக்க நெறியை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்”

என்று முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர் திரு. கே.வி.கே. சுந்தரம், நான்காவது பொதுத் தேர்தல் தொடர்பாக அளித்துள்ள தமது அறிக்கையில் சில யோசனைகள் தெரிவித்திருக்கிறார். 120 பக்கங்கள் அடங்கிய இந்த அறிக்கையை அவர், அரசிடம் அளித்தார்.

தேர்தல் செலவுகளைப் பற்றி அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :—

“தேர்தல் பிரசாரத்திற்காக அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் தற்போது பெரும் பணம் செலவிட்டு வருவது விரும்பத்தக்கதல்ல என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; ஆனால், நடைமுறையில், செலவுகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாகும்.”

வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரம் சம்பந்தமாகப் பெரும் பணம் செலவிடும் முக்கிய இனங்களைப் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்; 'மொத்தச் செலவைக் குறைப்பதற்காக அவற்றின் சில இனங்களையே ஒழுங்குபடுத்தலாம்; அல்லது தடை செய்யலாம்' என்று அவர் கூறியுள்ளார்; அவர் செய்துள்ள சிபாரிசுகள் வருமாறு:—

1. தேர்தல் பிரசாரத்திற்காக ஒரு சட்டமன்றத் தொகுதியில் 3 கார்களையே பயன்படுத்தலாம் என்று கட்டுப்படுத்த வேண்டும். நாடாளுமன்றத் தொகுதியில் 6 கார்களைப் பயன்படுத்தலாம்.
3. ஊர்வலங்கள்—ஆர்ப்பாட்டங்கள் முதலியவற்றையும், பெரிய கொடிகள் முதலியவற்றையும் பயன்படுத்துவதைத் தடைசெய்ய வேண்டும்.
3. தேர்தல் பிரசாரத்திற்காக வீதிகளில் நடந்துகொண்டே ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டும்.
4. வேட்பாளரின் தேர்தல் ஏஜெண்டைத் தவிர வாக்குச் சேகரிப்பதற்குப் பணம் கொடுத்து ஊழியர்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும்.”

தேர்தல் செலவுக்குக் கணக்குக் காட்டுவது சம்பந்தமான சட்டத்தில் உள்ள இரு முக்கியமான குறைகளை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்; 'இந்தக் குறைகளை அகற்றவேண்டும்' என்று அவர் வலியுறுத்தியுள்ளார்; இவை சம்பந்தமான சட்ட விதிகளை விரிவாக்கி அவற்றைத் 'திறமையாக செயல்படுத்துவதற்கு வழிசெய்ய வேண்டும்' என்கிறார்; அவர் கூறியுள்ளதாவது :—

“முதலாவதாக வேட்பாளர்கள் தேர்தல் சமயத்திலோ, தேர்தலுக்குப் பிறகோ, பிரசாரத்தை நடத்துவதற்காகவோ அல்லது நிர்வாகம் செய்வதற்காகவோ செலவிடப்பட்ட பணம் முழுவதற்கும் கணக்குக் காட்டவேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டும்.

“அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்களுக்காகவோ, தாம் நிறுத்தியுள்ள வேட்பாளர்கள் குழுவுக்கோ செலவிடும் பணத்தை இப்போதுள்ள சட்டப்படி, எந்த வேட்பாளர்களின் கணக்கிலும் காட்டவேண்டும் என்பதில்லை.

“தேர்தல் காலத்தில் கட்சிப் பிரசாரத்திற்காகக் கட்டுப்பாடான அரசியல் கட்சிகள் செலவிடக் கூடாது என்று தடைசெய்ய இயலாது; ஆனால் அவை, குறிப்பிட்ட வேட்பாளருக்காகச் செலவிடும் பணத்திற்குக் கணக்குக் காட்டவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.”

ஒவ்வொரு தொகுதியிலும் ஏராளமான வேட்பாளர்கள் போட்டியிடுவதுபற்றி அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது :—

“கட்டுப்பாடான கட்சிகளின் வேட்பாளர்களின் எண்ணிக்கையும், சுயேச்சை வேட்பாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இந்த அதிருப்திகரமான நிலைமையை மாற்றுவது கடினம்.

“ஏராளமான வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகள் அனைத்திலும் இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்களே முக்கியமானவர்களாக இருப்பார்கள்; மற்ற வேட்பாளர்கள், அவர்களும் 'போட்டியிட்டனர்' என்ற கதைதான்! அவர்கள், வாக்குச் சீட்டின் நீளத்தை அதிகப்படுத்தவும், வாக்காளர்களைக் குழப்பவுமே உதவுகின்றனர்! அத்துடன், அவர்களால் தேர்தல் செலவு அதிகரிக்கின்றது.

“முக்கியமான வாக்காளர்களின் தேர்தல் பிரசாரத்தை அவர்கள் கடினமாக்குகின்றனர்.

“நாடாளுமன்றத் தேர்தல்களிலும், சட்டமன்றத் தேர்தல்களிலும் பெரும்பாலான சுயேச்சை வேட்பாளர்கள் பொறுப்புத் தொகையை இழக்கிறார்கள். உதாரணமாக, சென்ற தேர்தலில், பொறுப்புத் தொகை இழந்த வேட்பாளர்கள் அனைவரும் போட்டியிடாமலிருந்திருந்தால் பல தொகுதிகளில் வாக்காளர்கள், சரியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சிறந்த வாய்ப்புக்களைப் பெற்றிருப்பார்கள்.”

தமிழகத் தலைவர்களுக்கு சிறப்புமிக்க பாராட்டு

கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி தங்களுக்குள்ளாகவே, 'தேர்தலின்போது கட்சிகள் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும்' என்று திட்டம் வகுத்துக்கொண்டதை திரு. சுந்தரம் பாராட்டியிருக்கிறார்; 'இதனால் தமிழகத்தில் தேர்தல்கள் சுமூகமாகவும், ஒழுங்காகவும் நடைபெற்றன' என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

கேரளத்திலும் ஆந்திராவிலும் இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

“தமிழகத்திலும், கேரளத்திலும், தேர்தல் காலத்தில் கட்சிகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு முறை நடவடிக்கைகள், அடுத்த பொதுத் தேர்தலுக்குள்ளாக நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் கமிஷன் நம்புகிறது”

என்றும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகப் பொருட்காட்சியில் ஓர் அற்புத அரங்கு

பி. எஸ். ஜி. நிறுவனத்தின் அரிய சாதனை

இந்திய உலக வர்த்தகக் கண்காட்சியில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் பி. எஸ். ஜி. அரங்கின் அமைப்பு, அனைவரையும் கவரக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது.

தொழில் துறையில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் புத்துலகுக்கு பி. எஸ். ஜி. நிறுவனமும் தனது பங்கைச் செலுத்தி வருகிறது. அதற்கு ஒரு நற்சான்றாகத் திகழ்கிறது அரங்க அமைப்பு.

60×60 அடி பரப்பில் நிறுவப்பட்டிருக்கும் அரங்கு, ஒரே ஒரு தூணில் அமைக்கப்பட்டிருக்கிறது. பார்வைக்கு அந்தரத்தில் நிற்பதாகத் தோற்றமளிக்கும் அதற்கு மொத்தம் 90 டன் இரும்பு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இயந்திரங்களும், பார்வையிட வரும் மக்களும் சேர்ந்து 200 டன்னுக்குமேல் இருக்கும்; ஆக மொத்தம் 300 டன் பளுவுக்குமேல் அத்தூண் தாங்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படும்போது வியப்பு ஏற்படுகிறது. அரங்கில், அந்நிறுவனத்தின் பல புதிய கண்டுபிடிப்புகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அரங்கத்தின் வேலைத்திறனை, ஜெர்மனி போன்ற மேலைநாட்டு நிபுணர்களும் வியந்து பாராட்டுவதாக அதன் அமைப்பாளர்கள் கூறியபோது, தொழில் துறையில் தென்னாட்டவரின் திறமையை எண்ணிப் பெருமிதம் உண்டாகியது.

மொத்தத்தில் பி. எஸ். ஜி. நிறுவன அரங்கு, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

இரசாயன உர இறக்குமதிக்கு ரூ. 220-கோடி

புதுடில்லி, பிப். 8—

வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட புதிய முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதற்கு அடுத்த ஆண்டில் மத்திய அரசு, 17-இலட்சம் டன் இரசாயன உரத்தை இறக்குமதி செய்யும்.

17-இலட்சம் டன் இறக்குமதி செய்ய ரூ. 220-கோடி செலவாகும்.

அதிக விளைச்சலைத் தரும் ரகங்களைச் சாகுபடி செய்யும் திட்டமானது, உணவுத் தானியங்களை இறக்குமதி செய்வதைவிட அதற்கு வேண்டிய இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதே நல்லது என்ற எண்ணத்தைப் பதவியிலுள்ளவர்களிடையே உண்டுபண்ணியுள்ளது; இதன் பலனாக, சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் சிந்தனையில் பெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. மேலும் பல ஏக்கர் நிலங்களை அதிக விளைச்சல் தரும் சாகுபடித் திட்டங்களின் கீழ் கொண்டுவருவதற்கான திட்டத்திற்கு இரசாயன உரத் தேவைகள் முழு அளவில் நிறைவு செய்யப்பட வேண்டும். நான்காவது திட்ட கால இறுதிக்குள் 3.25 கோடி ஏக்கர், இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஜெயசுக்லால் ஹாத்தி, உருக்கு அமைச்சர் டாக்டர் சென்னா ரெட்டி, கல்வியமைச்சர் டாக்டர் திரிகுண சென், துணையமைச்சர் கே. வி. ரகுநாத ரெட்டி, கே. எஸ். இராமசாமி, திருமதி நந்தினி சத்பதி ஆகியோர் மீண்டும் தேர்தலை நாடவேண்டியவர்களாவர்.

தமிழகம் 6 பேரையும், மைசூர் 4 பேரையும் தேர்ந்தெடுக்கவேண்டும்.

சுதந்தராக் கட்சியில் 4 பேரும், பி. சோ. கட்சியில் மூவரும், இடது கம்யூனிஸ்டுக் கட்சியில் மூவரும், தி. மு. கழகத்தில் ஒருவரும் விலகவிருக்கிறார்கள்.

‘ஹோம் ரூல்’---(தி.மு.க. ஆங்கில வார இதழ்)

வளர்ச்சி நிதிக்காக

9—2—68 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு திருவல்லிக்கேணி என். கே. டி. கலா மண்டபத்தில்

திரு. எம். ஜி. இராமச்சந்திரன்
அவர்கள் முன்னிலையில்

மாண்புமிகு முதலமைச்சர்
அறிஞர் அண்ணா
அவர்கள் தலைமையில்

செல்வி ஜெயலலிதாவின்
காவிரி தந்த கலைச்செல்வி
நாட்டிய நாடகம் நடைபெறும்.

நன்கொடை : 100, 25, 10, 5, 3

டிக்கெட்டுகள் 9—2—68 வெள்ளி மாலை 3-மணியிலிருந்து என். கே. டி. கலா மண்டபத்தில் கிடைக்கும்.

வியட்நாம் போருக்கு மட்டும் ரூ. 19,388 கோடி!

வெளிநாடுகளுக்கு உதவ ரூ. 1,875 கோடி!

ரூ. 6,000 கோடி துண்டுவிழும் அமெரிக்க வரவு-செலவுத் திட்டம்---அதிபர் ஜான்சன் விளக்கம்

அடுத்த ஜூலை 1-ம் நாள் முதல் தொடங்கும் நிதி ஆண்டுக்கு 18,610 கோடி டாலர் (ரூ 1,39,575 கோடி) செலவுத் திட்டம் ஒன்றை அமெரிக்க அதிபர் ஜான்சன் அளித்துள்ளார். இவ்வளவு பெரிய செலவுத் திட்டம், முன் எக்காலத்திலும் அளிக்கப்பட்டதில்லை.

"இந்தத் தொகையில் 18,280 கோடி டாலர் (ரூ. 1,37,400 கோடி) செலவினங்களுக்கும், 330 கோடி டாலர் (ரூ. 2,475 கோடி) கடன்கள் வழங்குவதற்கும் ஆகும்" என்று திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது நிதி நிலைத் திட்டத்தில் குடியரசுத் தலைவர் எதிர்பார்க்கும் வருவாய் 17,810 கோடி டாலர் (ரூ 1,33,575 கோடி); எனவே, நிதி நிலைத் திட்டத்தில் 800 கோடி டாலர் (ரூ. 6,000 கோடி) துண்டு விழுகிறது.

நடப்பு நிதி ஆண்டில் மொத்தச் செலவு 17,560 கோடி டாலர் (ரூ. 1,31,700 கோடி); அடுத்த நிதி ஆண்டில் 1,040 கோடி டாலர் (ரூ. 7,800 கோடி) அதிகரிக்கிறது.

பாதுகாப்புக்கு நடப்பு நிதி ஆண்டில் மதிப்பிடப்பட்ட செலவு 7,650 கோடி டாலர் (ரூ. 57,375 கோடி); அடுத்த நிதி ஆண்டில் இது 7,980 கோடி டாலராக (ரூ. 59,850 கோடி) உயருகிறது; அதாவது மூன்றில் ஒரு பங்கு அதிகம்.

"வெளிநாடுகளிலே, மிகப் பிடிவாதமாக இருக்கும் எதிரியின் அறைகூவல் நமக்கு ஏற்பட்டுள்ளது; நமது உறுதியைச் சோதிக்கிறார்; நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்புகளின் மதிப்பு என்ன என்று ஆழம் பார்க்கிறார்; நியாயமான அமைதி காண நாம் இடையறுமல் முயன்று வருகையில், ஆக்கிரமிப்பை உறுதியுடன் எதிர்த்து நிற்கவேண்டியது அவசியம்" என்றார் அவர்.

"வெளிநாட்டிலே மிக அபாரச் செலவு பிடிக்கும் ஒரு போரில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்; நம் நாட்டிலும் அவசரத் தேவைகள் இருக்கின்றன; இவற்றையெல்லாம் மனதில் கொண்டுதான் மிகமிக அவசியமான செலவினங்களைத் தெரிந்தெடுத்திருக்கிறேன்" என்றார் அதிபர் ஜான்சன்.

வெளிநாடுகளுக்கு உதவி

'சில சட்டமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்ப்பர்' என்று எதிர்பார்த்தும்கூட வெளிநாட்டுப் பொருளாதார உதவிக்காக 250 கோடி டாலர் (ரூ. 1,875 கோடி) செலவழிக்க அதிகாரம் கோருகிறார் அதிபர்.

"அனைத்துலகத் திட்டங்கள் வழியாக அமைதி நிலவும் உலகச் சமுதாயம் ஒன்றைத் தோற்றுவிக்க அமெரிக்கா முயலுகிறது; இந்தச் சமுதாயத்திலே நாடுகள் அனைத்தும் தம் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் தம் ஆற்றல்களைப் பயன்படுத்த முடியும்; இந்த வழி கடினமானதுதான் — நீளமானதுதான்; சில சமயங்களில் உள்ளச் சோர்வை உண்டுபண்ணக்கூடிய ஒன்றுதான்; ஆனால் அமைதிப் பணியிலிருந்து நாம் பின்வாங்கலாகாது" என்றார் அதிபர்.

"இந்த நாடு தனது வெளிநாட்டு உதவித் திட்டங்களைத் தொடர்ந்து நடத்திவரவேண்டியது அவசியமாகும்; ஏனெனில், 'மக்கள் அனைவருக்கும் சுதந்தரமும் நீதியும் இருக்கவேண்டும்' என்ற கோட்பாடுகளின்பேரில் தோன்றியது நம் நாடு; மக்களிலே மூன்றில் இரண்டு பங்குபேர் போதிய உணவு இல்லாமலும் நோயுற்றும், கல்வி இல்லாமல் இருந்துவரும் ஓர் உலகுக்கு நமது குழந்தைகள் வாரிசாக வர நாம் விரும்பவில்லை; இதற்காக உதவி தொடர்ந்து இருந்துவர வேண்டியது அவசியம்" என்றும் அதிபர் ஜான்சன் குறிப்பிட்டிருக்கிறார்.

வியட்நாமுக்கு அமெரிக்கப் பொருளாதார உதவி வழங்குவதற்காக அதிகப்படி ஒரு கோடி டாலர் ஜான்சன் கேட்டிருக்கிறார்; ஏற்கனவே இருந்துவரும் 47-கோடி டாலர் (ரூ. 353-கோடி) தொகைக்கு உபரியாகும் இது; அத்துடன் அந்த நாட்டிலே ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்க இராணுவப் பாதுகாப்புக்கு 2,578.4-கோடி டாலர் (ரூ. 19,338-கோடி) செலவு செய்ய அதிகாரம் கோருகிறது இந்த வரவு-செலவுத் திட்டம். இதுவும் நடப்பு நிதி ஆண்டுத் தொகையான 2,453.1-கோடி டாலரை (ரூ. 18,398-கோடி)விட அதிகமாகும்.

"நமது சாதனைகளின் பட்டியல் நீளமானதுதான்; ஆனால், அது போலவேதான் இருக்கிறது நாம் இன்னும் தீர்க்காமல் இருக்கும் அலுவல்களின் பட்டியலும்; நமது மனச்சாட்சியை உறுத்தும் இந்த மக்கள் குலத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நாம் உறுதியாக நின்று நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது நமது மரபின் கட்டளையேயாகும்" என்றார் அமெரிக்க அதிபர்.

தமிழக அரசு முடிவு--டில்லிவரவேற்பு

பங்கீட்டு முறை தொடர்ந்து நீடிக்கவே விரும்புகிறதாம்

புதுடில்லி, பிப். 8—

உணவுத் தானியங்கள் பங்கீட்டு முறையை நீடிப்பது என்று தமிழகம் எடுத்துள்ள முடிவு குறித்து மத்திய அரசு மகிழ்ச்சித் தெரிவித்துள்ளதாம்.

தமிழகத்தில் இம்முறை கணிசமாக விளேச்சல் கண்டிருப்பதையொட்டி, மாநிலத்ல்ல் பங்கீட்டு முறை நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால், 'இப்போதைக்கு நீக்கம் செய்யப்படமாட்டாது' என்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்; இது குறித்து மத்திய அரசு மகிழ்ச்சியடைந்துள்ளதாம்.

நல்ல அறுவடையைக் காரணம் காட்டி சில வடக்கு மாநிலங்கள், உணவுத் தானியங்கள் பங்கீட்டை நீக்கிவிட்டன; இதை, 'அவசரப்பட்டுச் செய்த முடிவு' என்று மத்திய அரசு கண்டித்துள்ளது.

"ஓராண்டு மிகுதியான விளேச்சல் கண்டுவிட்டதற்காக அவசரப்பட்டுப் பங்கீட்டு முறையை நீக்கிவிடக்கூடாது; அதன்மூலம் உணவுத் தானியங்கள் சீரான முறையில் விநியோகம் செய்யப்படும் என்றோ அவற்றின் விலே குறையும் என்றோ எதிர்பார்க்க முடியாது; பங்கீட்டை அவசரப்பட்டு எடுத்துவிடுவதால், 'நாட்டில் உணவுப் பற்றுக்குறை தீர்ந்துவிட்டது' என்ற எண்ணம் வெளிநாடுகளில் ஏற்பட்டுவிடும்; அதன் விளேவாக, நம் நாட்டுக்கு வெளிநாடுகளிலிருந்து உணவுத் தானியங்கள் அனுப்பப்படுவதும் குறைக்கப்பட்டுவிடும்" என்று மத்திய அரசு கருதுகிறதாம்.

விளம்பரம்

நினைவிருக்கட்டும்!

தமிழக மின் கழகத்தின்
6 சதவிகிதக் கடன்--1968

முதலையும் வட்டியையும் (6%) திருப்பித்தருவதற்கு
தமிழக அரசால் உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது

12--2--68 அன்று துவக்கப்படுகிறது
17--2--68 அன்று முடிவு பெறுகிறது

நல்ல வகையில் முதலீடு செய்ய உதவுகிறது

தேசிய மேம்பாட்டுக்கு உதவும் நற்பணிக்குத்
தாராளமாக வழங்குவீர்!

நட்டத்தைக் குறைக்கக் குறைக்க சலுகைகளைப் பெருக்குவோம்

அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

சட்டம் — கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் பிப். 8-ம் நாள் இரவு சென்னையிலிருந்து இரயில் மூலம் புறப்பட்டு மறுநாள் சேலம் அடைந்து அன்று திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு 10-ம் நாள் காலை சென்னை வந்தடைவார்.

தொழிலாளர் துயர் நீங்குவதே அரசுக்கு மகிழ்ச்சி தருவதாகும்

இருக்கின்ற நிதி நெருக்கடியிலும் முடிந்ததைச் செய்யத் தயங்கோம்!

போக்குவரத்துத் தொழிலாளர் கோரிக்கைகளை ஏற்று அமைச்சர் மு. கருணநிதி கனிவுரை

சென்னை, பிப். 8—

"தமிழக அரசுப் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களில் நாட்கூலி பெறுவோருக்கு நகர ஈட்டுப்படி; கடும் தண்டனை பெற்றவர்கள் தவிர மற்றவர்களுக்கு அட்டெண்டன்ஸ் போனசு; நாட்படியில் 10 காசு உயர்வு -- ஆகிய கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது" என, பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணநிதி அவர்கள் அறிவித்தார்.

நேற்று இரவு 10-மணியளவில் போக்குவரத்துக் துறை மத்திய தெற்குப் பணிமனையிலுள்ள கலை அரங்கில், பஸ் தொழிலாளர் கூட்டம் நடைபெற்றது.

தோழர் எஸ். அமிர்தலிங்கம் அனைவரையும் வரவேற்ருர்.

சங்கத் தலைவர் எஸ். இராகவானந்தம், கூட்டத்திற்குத் தலைமை வகித்து, தொழிலாளரின் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

அமைச்சர் மு. கருணநிதி அவர்கள் பேசியதாவது:—

"இந்தப் புதிய அரசு, தொழிலாளரின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்த அரசு—அவற்றை நீக்க அக்கறை காட்டி உழைக்கும் அரசு—என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

சென்ற ஆண்டு நிதி நிலே அறிக்கையைச் சட்டமன்றத்தில் அளித்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், விவாதத்தின் முடிவில் பதிலளித்துப் பேசும்போது, 'நான் கீழ்மட்டத்திலுள்ளோருக்கு — தொழிலாளருக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்யமுடியுமோ அவ்வளவு தூரம் நன்மை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் நிதி நிலே அறிக்கையைத் தயாரிக்கத் துவங்கினேன்; ஆனல், நிதி நெருக்கடி காரணமாகச் சில பல சலுகைகளை — வசதிகளை — நன்மைகளைத்தான் செய்ய முடிந்தது; இது பலருக்கு மகிழ்ச்சி அளித்தது என்ருலும், எனக்கு முழு மகிழ்ச்சி—முழுத் திருப்தி ஏற்படவில்லை' என்ற கருத்தினைக் கூறினர்.

'இது, ஒப்புக்காகச் சொல்லப்பட்டது அல்ல—உள்ளம் திறந்து கூறப்பட்டது' என்பது அவர் உள்ளத்தை அறிந்த உள்ளங்களுக்கெல்லாம் தெரியும்.

அண்ணுவின் உள்ளம் உணர்ந்து —இந்த அரசின் நல்லெண்ணம் அறிந்து பிரச்சினைகளை நாம் அணுகவேண்டும்.

இதையெல்லாம் கவனத்தில் கொண்டு—நாட்டின் நிதி நிலேயையும் ஆராய்ந்துதான், தொழிலாளர்கள் அளித்துள்ள கோரிக்கைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

முதல் கோரிக்கை:—நாள் கூலி பெறுவோருக்கு நகர ஈட்டுப் படி தருவது; இந்தக் கோரிக்கையை ஏற்று 2—2—68-ம் நாளே உத்தரவிடப்பட்டுவிட்டது; '1-10-67 முதற்கொண்டு அந்த நகர ஈட்டுப் படி தரவேண்டும்' என்றும் உத்தரவிடப்பட்டுவிட்டது.

இரண்டாவது கோரிக்கை:—அம்பத்தூர், குரோம்பேட்டை முதலிய இடங்களில் வாழ்வோருக்கு நகர ஈட்டுப் படி தருவது; இந்தத் தொழிலாளரின் கோரிக்கையை, மிகப் பரிவுடன் முதலமைச்சர் அண்ணு அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன்; 'நல்ல செய்தியை விரைவில் எதிர்பார்ப்போமாக' என்றும் அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்த கோரிக்கை:— 'ஊக்க போனசுக்கு உச்சவரம்பு விதிப்பதை நீக்க வேண்டும்' என்பது; இதைப்பற்றி விரைவில் கலந்தாலோசித்து முடிவுகளை வெளியிடவிருக்கிருேம்.

அடுத்தது:—'தண்டனை பெற்றவர்களுக்கு அட்டண்டென்ஸ் போனஸ் குறைப்பதை நீக்க வேண்டும்' என்பது; இதில், மூன்று குற்றங்கள்—அதாவது அறவே வேலேயிலிருந்து நீக்கப்பட்டவர்கள்; வேலேநீக்கம் பெற்றவர்கள்; வேலேயிலிருந்து தள்ளி வைக்கப்பட்டவர்கள் மற்றவர்களுக்கு — எந்தவிதத் தண்டனைக்கு ஆட்பட்டிருந்தாலும்—அட்டண்டன்ஸ் போனசு தரப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அடுத்து, 'நைட் ஷிப்டி'ல் பணியாற்றுவோருக்குப் படி தருவது —பேட்டா தருவது போன்ற கோரிக்கைகளாகும்; நிதி நிலே பற்றி ஏற்கனவே கூறிவிட்டேன்; எவ்வளவு கஷ்டமிருக்கிறது என்பதையும் கூறினேன்; என்னைவிட நீங்கள் கவலேப்பட்டது உங்கள் முகபாவத்திலிருந்தே புரிந்தது; ஆனுலும், அறவே நான் கைவிரித்துவிடவில்லே; ஆனல் இரண்டு கையை விரிக்கிறேன்—அதாவது பத்துக் காசு உயர்வு தரப்படவிருக்கிறது.

நாள் படியில் ஒவ்வொரு கட்டத்திலும் 10 காசு உயர்த்தப்பட்டிருக்கிறது; ரூ. 1.25 பெற்றவர்கள்—ரூ. 1.35 பெறுவார்கள்.

அதுபோல் 'நைட் ஷிப்டு'க்காரர்களுக்கும் 10 காசு உயர்த்தப்பட்டிருக்கிறது.

'பத்துக் காசுதானே' என்று நீங்கள் நினைக்கலாம்; ஆனுல், இதனுல் 3 இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு அதிகச் செலவாகும்.

இதுகூட முதல் கட்டமாகத் தரப்படும் சலுகைதான்; நட்டத்தை நாம் குறைக்கக் குறைக்க அடுத்த கட்டங்கள் பற்றி ஆராயப்படும்.

உங்கள் கோரிக்கைபற்றி அரசு எவ்வளவு நல்லெண்ணம் கொண்டிருக்கிறது — எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகிறது— என்பதைக் காட்டும் தொகைதான் இது; ஆகவே, இந்த முதல் கட்ட உயர்வை நீங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

முழுத் திருப்தி இதனுல் ஏற்படாவிடினும், நல்லெண்ணத்தைப் பாராட்டும் வகையில் இதை ஏற்றுக்கொண்டு, 'நட்டத்தைக் குறைக்கும் நமது இலட்சியபுரி நோக்கி நடக்கும்போது உங்களது நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்' என்ற நம்பிக்கை கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன்."

மகாராட்டிரா சட்டமன்றத்தில் ஒரு மொழி வெறியர்!

கவர்னர் உரையின்போது 'சண்டித்தனம்'

ஒழுங்குமீறி நடந்துகொண்டதால் காவலர்கள் வெளியேற்றினர்

பம்பாய், பிப். 7—

மகாராட்டிர சட்டமன்றத்தின் எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர், சட்டமன்றக் கூட்டுக் கூட்டத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்.

கூட்டத் தொடரின் துவக்க நாளான இன்று கவர்னர் உரை நிகழ்த்தியபோது இச்சம்பவம் நிகழ்ந்தது.

'கவர்னரின் வழக்கமான உரையின்போது, குறுக்கிடலாகாது' என்ற ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாததால், அந்த எதிர்க் கட்சி உறுப்பினர் வெளியேற்றப்பட்டார்.

கவர்னர் டாக்டர் செரியன் மராத்தியில் சில வாக்கியங்களை முதலில் வாசித்துவிட்டு தமது உரையை துவக்கினர். அவர் ஆங்கிலத்தில் தமது உரையை படிக்க ஆரம்பித்ததும், உறுப்பினர் தோடே என்பவர் எழுந்து நின்று கொண்டு, 'இந்தி, மராத்தி அல்லது மலேயாளத்தில் பேச வேண்டும்' என்றும், 'ஆங்கிலத்தில் கண்டிப்பாகப் பேசக்கூடாது' என்றும் கவர்னரைக் கேட்டுக்கொண்டார்.

அந்த உறுப்பினர் கூறியதைக் கவர்னர் கேட்டார்; பின்பு இடத்தில் அமருமாறு உறுப்பினரை அவர் கேட்டுக் கொண்டார்; ஆனல், கவர்னர் ஆங்கிலத்தில் கூறியதை, 'என்னல் புரிந்து கொள்ள முடியவில்லே' என்று தோடே குறிப்பிட்டார்; மராத்தி

(1-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தி தொடர்ச்சி)

யில் கூறுமாறு கோரினர்; டாக்டர் செரியன் தமது உரையைத் தொடர்ந்தார்; ஆனல் தோடே மீண்டும் குறுக்கிட்டார்; அவையைவிட்டு வெளியேறுமாறு அவரைக் கவர்னர் கேட்டுக்கொண்டார்; ஆனல் தோடே அவையை விட்டு வெளியேறவில்லே; மராத்தி அல்லது தாய்மொழியில் பேசுமாறு கவர்னரை அவர் மீண்டும் வற்புறுத்தினர்.

ஒரு கட்டத்தில் கவர்னரும்—தோடேயும் ஒரே நேரத்தில் பேசிக்கொண்டிருந்தனர்.

அதன்பேரில், எதிர்க் கட்சி உறுப்பினரை வெளியேற்றுமாறு மார்ஷலுக்குக் கவர்னர் உத்தரவிட்டார்; தோடேயை 5 வார்டன்களும் ஒரு மார்ஷலும், அவையிலிருந்து வெளியே கொண்டுசென்றனர்; ஜீப் ஒன்றில் போலீசு நிலேயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

'அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சட்டமன்ற அவைத் தலேவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

தோடே 'லாபி'யில் இருந்தபோதும், அவையிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டபோதும் ஆங்கிலத்தில் பேச கவர்னரை அனுமதித்ததாக அரசையும், காங்கிரசு உறுப்பினர்களையும் உரத்த குரலில் கண்டித்துக்கொண்டே இருந்தார்.

மராத்தி, இந்தி அல்லது தாய்மொழியில் (மலேயாளம்) உரை நிகழ்த்துமாறு கேட்டுக்கொண்டு கவர்னருக்கு கடிதமொன்றை எதிர்க் கட்சிகளின் தலேவர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர்; 'மாநிலத்தின் மொழி அல்லது இந்தி கவர்னருக்குத் தெரிந்திருக்க வேண்டும்' என்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.